

தருமபுரி மாவட்டம் கதிர்நாயக்கனஹள்ளியில் கட்டப்பட்டுள்ள புதிய ஊராட்சி மன்ற கட்டிடத்தை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் திறந்து வைத்து,பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.உடன் மாவட்ட ஆட்சியர் திருமதி.சாந்தி,கோட்டாட்சியர் திருமதி.டி.கே.கீதாராணி,காரிமங்கலம் வட்டாச்சியர் ஜெ.சுகுமார், தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் பி.பழனியப்பன்,உதவியாளர் தேவ்ஆனந்த்,மற்றும் மாநில,மாவட்ட,ஒன்றிய,பேரூர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



மதுரை ஒத்தக்கடையில் வணிகர்கள் சங்க ஆண்டுவிழாவை முன்னிட்டு நடைபெற்ற இரட்டை மாட்டு வண்டிப் பந்தயத்தை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி கொடியசைத்து துவக்கி வைத்த போது எடுத்தபடம். உடன் ஒன்றியச் செயலாளர் அ.பா.ரகுபதி, மதுரை மாவட்ட அறங்காவலர் குழுத் தலைவர் ரவிச்சந்திரன், ஒத்தக்கடை ஊராட்சிமன்றத் தலைவர் முருகேஸ்வரி சரவணன், வணிகர் சங்க நிர்வாகிகள் ரகுபதி, இஸ்மாயில், முனீஸ்வரன் மற்றும் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் உள்ளனர்.

# செஞ்சி ஒன்றியத்தில் இலவச மருத்துவ முகாம்!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் துவக்கி வைத்தார்!

செஞ்சி, மே 15 -

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் அனையேரி ஊராட்சியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 70 வது பிறந்தநாளை முன்னிட்டுமாபெரும் இலவச கண் சிகிச்சை முகாம் நடைபெற்றது.

செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார்.

ஒன்றிய கவுன்சிலர் உமா மகேஸ்வரி ஆனந்தன் முன்னிலை வகித்தார்.

அனையேரி ஊராட்சி மன்ற தலைவரும் செஞ்சி மத்திய ஒன்றிய மாவட்ட பிரதிநிதி அனையேரி ரவி அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் சிறு பான்மையினர் நலன்மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு மாபெரும் இலவச கண் சிகிச்சை முகாமினை தொடங்கி வைத்தார்.

புதுச்சேரி வெங்கடேஸ்வரா கண் மருத்துவமனை கண் மருத்துவர்சங்கீதா தலைமையிலான கண்மருத்துவர்கள் கலந்து கொண்டு

கண் பரிசோதனை, கண் நீர் அழுத்தம், கிட்ட பார்வை, தூரப்பார்வை உள்ளிட்ட கண் சம்பந்தமான நோய்களுக்கு பரிசோதனை செய்துசிகிச்சை அளித்தனர்.

நிகழ்ச்சியில் நிர்வாகிகள் வாசு, இக்பால், அலெக்ஸ், தக்ஷிணாமூர்த்தி, மணி, வில்லியம், குமார், ஊராட்சி மன்ற துணைத் தலைவர் தணிகைவேல், ஊராட்சி செயலாளர் யேசுமேரி, உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.முகாமில் சுமார் 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு கண் மருத்துவ பரிசோதனை செய்து கொண்டனர்.

# தமிழ்நாட்டில் தேசிய அறிவியல் தினம்!

சென்னை, மே.15-

தேசிய அறிவியல் தினத்தை முன்னிட்டு சென்னை, கோவை, திருச்சி உட்பட தமிழ்நாடு முழுவதும் 200 இடங்களில் பகுதி பகுதியாக ‘நிலா திருவிழா 200’ நிகழ்ச்சியை தமிழ்நாடு அரசு பள்ளிக்கல்வித்துறை, மத்திய அரசின் விஞ்ஞான் பிரசார் உள்ளிட்டவை இணைந்து நடத்தி வருகின்றன.

பள்ளி, கல்லூரி மாணவர்கள், பொதுமக்களை வானியலில் ஆர்வமுள்ள தன்னார்வலர்கள் சந்தித்து பூமியின் இயற்கை துணைக்கோளான நிலா மற்றும் வியாழன், வெள்ளி உள்ளிட்ட கோள்களை அதிநவீன தொலைநோக்கி மூலமாக காண்பித்து அறிவியல் உண்மைகளை விளக்குகிறார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா குறித்து ஆலோசனை!

# மதுரை மாநகர் மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. அறிவிப்பு

மதுரை, மே. 15-

மதுரை மாநகர் மாவட்டக் கழகச் செயலாளர் கோ.தளபதி விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-



மதுரைமாநகர்மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம் நாளை (16.05.2023செவ்வாய்க்கிழமை) மாலை 6.00 மணி அளவில் பசுமலை கோபால்சாமி திருமணமண்டபத்தில் மாவட்ட அவைத்தலைவர் மா.ஒச்சுபாலு தலைமையில் நடைபெற இருப்பதால் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக, வட்ட கழக செயலாளர்கள், ஒன்றிய, பேரூர், கிளை கழக செயலாளர்கள், அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.


பொருள்:1. கழகத் தலைவரின் அறிவுறுத்தலின்படி கழகபுதியஉறுப்பினர்கள் சேர்த்தல் சம்மந்தமாக

2. முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நுற்றாண்டு விழா குறித்து

இவ்வாறு மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. அறிவித்துள்ளார்.

# நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் அறிவிப்பு!



நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் நாகையில் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் கலைஞர் அரங்கில் நாளை (16.5.2023-செவ்வாய்க்கிழமை) காலை 10.00 மணிக்கு மாவட்டக் கழக அவைத்தலைவர் ப.செல்வம் தலைமையில் நடைபெறுகிறது. கூட்டத்தில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், மாவட்ட ஊராட்சி துணைத் தலைவர்,, ஒன்றியக் குழு தலைவர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்திட வேண்டும்.

பொருள்.

1. முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா.
2. கழக இளைஞர் அணி செயலாளர் அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் நாகை மாவட்டம் வருகை
3. கழக ஆக்கப்பணிகள்.

**என்.கௌதமன்**
செயலாளர்
நாகை மாவட்ட தி.மு.க.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவிற்கிணங்க தஞ்சாவூர் மாநகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் கும்பகோணம் கோட்டம் சார்பில் போக்குவரத்து துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் புவிசார் நவீன தானியங்கி அறிவிப்பான் (GPS) மூலம் பேரூந்து நிறுத்தம் ஒலி அறிவிப்பு செய்யும் கருவி பொருத்தப்பட்ட பேருந்தினை கொடியசைத்து துவக்கி வைத்து பேருந்தில் பயணித்தார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர், சட்டமன்ற உறுப்பினர்கள் துரை.சந்திரசேகரன், சாக்கோட்டை க.அன்பழகன். தஞ்சாவூர் மாநகராட்சி மேயர் சண்.இராமநாதன், மாவட்ட ஊராட்சித்தலைவர் உஷாபுண்ணியமூர்த்தி , துணை மேயர் மரு.அஞ்சுகம் பூபதி , தமிழ்நாடு அரசு. போக்குவரத்து கழக கும்பகோணம் கோட்ட மேலாண் இயக்குநர் ராஜ்மோகன் மற்றும் பலர் உடன் உள்ளனர்.




கண்ணீர் அஞ்சலி...

புதுக்கோட்டை வடக்கு
மாவட்ட கழகச் செயலாளர்
K.K.செல்லபாண்டியன் M.Com.,BL.,
அவர்களின் தகப்பனார்



S.கண்ணன் ஆசிரியர் (ஓய்வு)

அவர்கள் 13.05.2023 அன்று இயற்கை எய்தினார் அன்னாரின் இறுதி ஊர்வலம் நல்லடக்கம் 15.05.2023 காலை 10 மணியளவில் கீரனூரில் உள்ள அவர்களது இல்லத்தில் இருந்து நடைபெறும் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அனைத்து ஒன்றிய,நகர மற்றும் பேரூர் கழகம்
புதுக்கோட்டை வடக்கு மாவட்டம்